பதிவஞ்சல் மூலமாக:

**மருத்துவக்கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை -10 அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை: மரு.ரா.நாராயணபாபு, எம்.டி., டி.சி.எச்.,**

**ந.க.எண்:77926/நி2/4/2020.** **நாள்:10.11.2021.**

பொருள் : தமிழ்நாடு அமைச்சு பணிகள் - கருணை அடிப்படையில் பணி நியமனம் - திரு.A.வேல்முருகன் தா/பெ.(லேட்). திருமதி.A.குழுமாயி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி - கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டது - பணி வரன்முறை ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்:560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய அரசாணைகள்.
2. அரசாணை (நிலை) எண்:120, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.06.1995.
3. அரசாணை (நிலை) எண்:42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:12.03.2007.
4. அரசாணை (நிலை) எண்:202, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:08.10.2007.
5. அரசாணை (நிலை) எண்:18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:23.01.2020.
6. அரசாணை (நிலை) எண்:48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.02.2021.
7. அரசு கடித எண்:8775/ஏடி2/2021-1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:16.03.2021.
8. இவ்வியக்ககப் பணியமர்த்தல் ஆணை ந.க.எண்:37662/நி2/4/2019, நாள்:25.10.2019.
9. முதல்வர், கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி அவர்களின் பணி நியமன செயல்முறை ஆணை ந.க.எண்:10833/நி3/2019, நாள்:19.11.2019.
10. முதல்வர், கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித ந.க.எண்:8640/நி3/2020, நாள்:21.12.2020.
11. முதல்வர், கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித ந.க.எண்:6307/நி3/2020, நாள்:04.05.2021.

*****

**ஆணை:**

திருச்சிராப்பள்ளி, மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் சலவை பணியாளராகப் (Dobhy) பணியாற்றிய திருமதி.A.குழுமாயி அவர்கள் 23.01.2010 அன்று மரணமடைந்து விட்டார். அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடித்தவர் ஆவார். அவரின் பிறந்த தேதி 15.08.1960 ஆகும். அவர் தொடர்ந்து பணியிலிருந்திருப்பின் அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.08.2020 ஆகும். மேற்படி அரசு ஊழியர் இறந்ததைத் தொடர்ந்து, அவரின் மகனும், வாரிசுதாரருமாகிய திரு.A.வேல்முருகன் அவர்கள் தனது 01.06.2011 நாளிட்ட கடிதத்தில் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி, உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளார்.

2) மனுதாரர் திரு.A.வேல்முருகன் அவர்களின் பிறந்த தேதி 30.05.1983 ஆகும். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளாராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ன்படி, தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக ரூ.19500 – 62000/- நிலை 8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, திருச்சிராப்பள்ளி, கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக்கல்லூரியில் 20.11.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

3) எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.A.வேல்முருகன் என்பவரின் பணியினை, பார்வை 6 மற்றும் 7-ல் காணும் அரசாணைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 20.11.2019 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து செயல்முறை ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

**மரு.ரா.நாராயணபாபு**
**மருத்துவக்கல்வி இயக்குநர்.**

பெறுநர்

1. திரு.A.வேல்முருகன்,
   இளநிலை உதவியாளர்,
   கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 001.
   -- உரிய வழியாக.

2. முதல்வர், கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 001.

3. மாநில கணக்காயர், சென்னை-600 018.

4. மாவட்ட கருவூல அலுவலர், திருச்சிராப்பள்ளி.

**நகல்:**

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை-06

உதிரி / இருப்பு கோப்பு.

// உண்மை நகல் / அனுப்பப்படுகிறது //

மேலாளர்

15/11/21